2024 டிசம்பர் 3 ஆம் திகதி

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்
6/5, லயார்ட்ஸ் வீதி,
கொழும்பு 5
இலங்கை

மாண்புமிகு. ஹர்ஷன நாணயக்கார
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர்
இல.19
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை
கொழும்பு 10.

மாண்புமிகு அமைச்சர் அவர்கட்கு,

இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, இலங்கை மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு (NPP) குறிப்பிடத்தக்க வகையிலான மேலிடக்கட்டளையினை வழங்கியுள்ளதோடு, பொதுநம்பிக்கை, வெளிப்படைத்தன்மையுடைய நிர்வாகம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றை மீட்டெடுப்பதற்கான முக்கிய சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்பினையும் உங்களுக்கு வழங்கியுள்ளனர். அந்த வகையில், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகிய விடயப்பரப்புகளில் சட்டம் மற்றும் கொள்கை சீர்திருத்தங்களுக்கு உடனடி கவனத்தை செலுத்தக்கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) சார்பாக, நான் இக்கடிதத்தினை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

இலங்கையில் விரிவான ஆட்சிமுறை சீர்திருத்தங்களுக்கான முக்கியமான தேவையினை அரகலய எடுத்துரைத்திருந்ததுடன், அது ஊழலுக்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளுக்கான பொதுமக்களிடமிருந்தான நீண்டகால கோரிக்கைகள் மற்றும் பரவலான பொறுப்புக்கூறலற்ற தன்மை போன்றவற்றை கவனத்திற்குட்படுத்தி அரச அமைப்புகளின் மீதான பொதுமக்கள் நம்பிக்கையை கடுமையாக வலுவிழப்பிற்கு உட்படுத்தியிருந்தது. இச்சூழலில், உயரிய வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல், நிருவாக மேலாதிக்கம், நிறுவனங்களில் அரசியல் தலையீடுகள் மற்றும் வேரூன்றியுள்ள தண்டனை விலக்களிப்பு கலாசாரம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய அவசரத் தேவையினை CPA மற்றும் அதன் பங்காளர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தியிருந்தனர்.

மேலும், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மோதல் முரண்பாடுகளுக்கான அடிப்படைக் காரணங்களைத் கண்டறிந்து தீர்ப்பதற்கான இயலாமை மற்றும் விருப்பமின்மை ஆகியன சமூகப் பிளவுகளை மேலும் வலுப்படுத்துதல், கண்காணிப்பு தீவிரமயப்படுத்தல், மற்றும் தற்போதுள்ள மோதல்களை மீண்டும் வலுவூட்டி புதிய பதட்டங்களைத் தூண்டும் அபாயத்தினையும் அதிகரித்துள்ளது. குறிப்பாக, 2024 ஆம் ஆண்டு அக்டோபர் தொடக்கம் டிசம்பர் வரையான மாதங்களுக்கிடையில் பல சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) பயன்பாடானது கவலையளிப்பதுடன், இவை PTA உள்ளிட்ட பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களை இரத்துசெய்வதாக கூறிய NPPயின் தேர்தல் பிரச்சார உறுதிமொழி பற்றிய கேள்விகளை எழுப்புகிறது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கான உயரிய மேலிடக்கட்டளையினை கருத்தில் கொண்டு, முற்போக்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வது மிகவும் இன்றியமையாதது என்பதனை CPA உறுதியாக நம்புகிறது. இவ்வாறான சீர்திருத்த செயல்முறைகளை வடிவமைப்பதில் வெளிப்படைத்தன்மையுடைய முறையில் பல்வேறு பங்குதாரர்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை CPA மேலும் வலியுறுத்துகிறது. பலதரப்பட்ட கோணங்களில்

விடயபரப்பினை கவனம் செலுத்தக்கூடிய கூட்டிணைந்த அணுகுமுறைகள், இவ்வாறான புதிய சீர்திருத்த முயற்சிகளின் செயல்திறன் மற்றும் நிலைபேண்தன்மையினை கணிசமாக மேம்படுத்தும்.

இந்த விடயம் சம்பந்தமாக, தலையீடுகள் அவசியப்படும் என கருதும் பல விடயப்பரப்புக்களை CPA இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளது. இந்த விடயப்பரப்புகள் பிரதானமான நான்கு பிரிவுகளிலான கட்டமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (1) ஆட்சிநிருவாக முறைமை மற்றும் பொறுப்புக்கூறல், (2) சட்டமியற்றுதல், (3) நல்லிணக்கம், மற்றும் (4) சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல்.

எதிர்வரும் சட்டமியற்றல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரலில் மேற்குறிப்பிட்ட விடையப்பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு உங்களது அமைச்சகத்தை CPA வலியுறுத்திநிற்கிறது. மேலும், அனைத்து பொதுமக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையிலான நீதி கட்டமைப்பொன்றை உருவாக்க உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கிறது. மேலதிகமாக, இந்த விடயங்கள் சம்பந்தமாக உங்களுடனான கலந்துரையாடலுக்கான ஒரு வாய்ப்பினையும் கோருவதுடன், அவசியமான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் எமது தொடர்ச்சியான ஆதரவை வழங்க தயாராகவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதற்கான உங்களுடைய பதிலை எதிர்பார்ப்பதோடு நீதித்துறையில் மாற்றங்களை உருவாக்கும் உறுதியான செயற்பாட்டினை நோக்கிய தெளிவான நடவடிக்கைகளை எதிர்பார்க்கிறோம்.

உண்மையுள்ள,

டாக்டர். பாக்கியசோதி சரவணமுத்து
நிர்வாக இயக்குனர்

## சட்ட மற்றும் கொள்கைவகுப்பு நிகழ்ச்சி நிரலில் அவசியமான தலைபீடுகள்

| **ஆட்சிநிருவாக முறைமை மற்றும் பொறுப்புக்கூறல்** | |
|---|---|
| நீதித்துறை சுதந்திரத்தை வலுப்படுத்துதல் | • உயர்நீதிமன்ற நியமனங்களின் போது ஜனாதிபதி மற்றும் அரசியலமைப்பு சபை ஆகியோர் பின்பற்ற வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைக் குறிப்பிடுதல்.<br>• நீதிபதிகளாக நியமிக்கப்படும் நபர்களை நியமனம்செய்யும்போது, வெளிப்படைத்தன்மையுடைய அளவுகோல்களை ஜனாதிபதி ஏற்பிசைவு செய்தலை உறுதிசெய்தல்.<br>• ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட நியமனங்களை அங்கீகரிப்பதில் தீர்மானம் எடுக்கும்போது, அரசியலைப்புச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல் மற்றும் செயன்முறை விதிகளை உருவாக்க அரசியலமைப்பு சபையை ஊக்குவித்தல்.<br>• உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதியரசர்களை பணிநீக்கம் செய்யும்போது தெளிவானதும், நேர்மையானதுமான செயன்முறையை நிறுவுவதற்கு சட்டமியற்றலின் தேவைப்பாடு. |
| சுதந்திரமாக இயங்கக்கூடிய அரசதரப்பு சட்ட வழக்கறிஞர் அலுவலகம் | • பொறுப்புக்கூறலை உறுதி செய்யக்கூடிய வகையில் சுதந்திரமான அரசதரப்பு சட்ட வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவுதல்.[1] |
| பிரசித்திபெற்ற அடையாள வழக்குகள் | • பிரசித்தி பெற்ற வழக்குகளில் வெளிப்படைதன்மையுடனான விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியனவற்றை உறுதி செய்தல் பொதுமக்கள் நம்பிக்கையை மீட்டெடுப்பதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இவற்றில், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் பல பிரசித்தி பெற்ற அடையாள வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதும் உள்ளடங்கும்.[2] |

---

[1] மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை பற்றிய தெளிவான விடயங்களுடன்கூடிய பின்வரும் ஆவணத்தைப் அணுகவும்: “இலங்கையில் சட்டமா அதிபர் திணைக்களத்தை மறுபரிசீலனை செய்தல்: சீர்திருத்தத்திற்கான யோசனைகள்” (CPA, நவம்பர் 2020).
https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/AGs-Dept-Final.pdf

[2] “இலங்கையில் புரிந்துகொள்ளுதலில் சிரமமான நீதி மற்றும் பிரசித்திபெற்ற அடையாள வழக்குகள்" (CPA, மார்ச் 2023).
https://www.cpalanka.org/wp-content/uploads/2023/04/Elusive-Justice-and Emblematic-Cases-in-Sri-Lanka-Book-Online-Version-1.pdf

| | |
|---|---|
| ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் | • 2019 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பரஸ்பர புரிந்துணர்வு சட்ட உதவி (MLA) கோரிக்கைகளை நிவர்த்தி செய்வது உள்ளிட்ட வலுவானதோர் புரிந்துணர்வு சட்ட உதவி (MLA) கட்டமைப்பொன்றினை நிறுவுதல்.<br>• இலங்கையில் சிவில் இழப்பீடு மற்றும் வழக்கு தொடுத்தல் பொறிமுறை போன்ற புதிய சட்டக் கருத்தியல்களை நடைமுறைப்படுத்துதல், குறிப்பாக இந்தக் கருத்தியல்களின் வெளிப்பாடு 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[3] |
| **சட்டமியற்றல்** | |
| சட்டமியற்றல் செயன்முறை | • இலங்கையின் சட்டமியற்றல் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், இதில் பின்வருவன அடங்கும்:<br>• சட்டமியற்றும் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், குறிப்பாக ஒரு சட்டவரைவானது வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்னர் பொதுமக்கள் ஆலோசனைகளை பெற்றிருப்பதனை உறுதிப்படுத்துதல்.<br>• ஒரு சட்டவரைவினை கொண்டு வந்து பாராளுமன்றத்தில் அதன் முதலாம் மற்றும் இரண்டாம் வாசிப்பிற்கு இடையேயான கலந்தாய்வு காலத்தை நீடிப்பதனூடாக குறித்த சட்டவரைவு சம்பந்தமான முழுமையான மீளாய்வினை மேற்கொள்ளல் .<br>• சட்டவரைவொன்றினை சவாலுக்குட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்படும் கடைசி மனுவினை உயர்நீதிமன்றம் சட்டவரைவின் அரசியலமைப்புடனான இசைவுடைமை தன்மையினை மறுபரிசீலனை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள மூன்று (3) வார கால அவகாசத்தினை தெளிவுபடுத்தும் வகையில் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளில் திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>• சட்டமியற்றலின் பின்னர், நீதித்துறை அதனை மீளாய்வு செய்வதனை உறுதி செய்யும் வகையிலான அரசியலமைப்பு சீர்திருத்தம். |

[3] "இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொருளாதாரக் குற்றச்செயல்களுக்கு இடையே உள்ள இடைத்தொடர்புகளைப் புரிந்துகொள்வதற்கான ஆலோசனை அறிக்கை: சிக்கல்கள் மற்றும் முன்னோக்கி செல்வதற்கான சாத்தியமான வழிகளை ஆராய்தல்" (CPA, மார்ச் 2024).

https://www.cpalanka.org/wp-content/uploads/2024/03/Economic-Crimes-Advocacy-Report.pdf

| நல்லிணக்கம் | |
|---|---|
| காணி உரிமையாளர்களிடம் அவர்களது காணிகளை ஒப்படைத்தல் | • காணி தொடர்பான கொள்கைகள் தேசிய காணி ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படுவதோடு மாகாண சபைகளுக்கு பரந்தளவான சுதந்திரம் வழங்கப்படும் வகையில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுல்படுத்துதல்.<br>• வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசின் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடையாத தனியார் காணிகள் அனைத்தையும் மீள உரியவர்களுக்கு வழங்குதல்.<br>• நியாயமற்ற வகையில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீள கையளித்தல் மற்றும் கடந்த தசாப்தங்களில் அரசின் காணி கையகப்படுத்துதல் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு விரிவான இழப்பீடு திட்டத்தினை உருவாக்குதல்.<br>• அனைத்து காணி கையகப்படுத்தல் சந்தர்ப்பங்களிலும், இலங்கையினால் 2001 ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தன்னார்வமற்ற மீள்குடியேற்றக் கொள்கையை (NIRP) பின்பற்றல்.<br>• ஒரு 'பொதுநல நோக்கத்திற்கான' காணி கையகப்படுத்துதல்களை பரிசீலணை செய்து வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல். மேலும், விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கிழைக்கும் அபிவிருத்தி திட்டங்களில் தேவையான ஆய்வுகளை உறுதி செய்தல்.[4] |
| அரசியல் கைதிகளின் விடுதலை | • எவ்வித குற்றச்சாட்டும் இன்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் விடுவிக்கப்படுதல்.<br>• குற்றவியல் வழக்குகளில் ஒரு நபருக்கு எதிரான ஒரே ஆதாரம் அவர்களின் சொந்த வாக்குமூலமாக இருக்கும் வழக்குகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு குறித்த நபர்கள் விடுவிக்கப்படுதல்.<br>• பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் மாத்திரம் தனிநபர் ஒருவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளை மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குதல். |

[4] இலங்கையில் காணி மோதல்களின் இடைவெட்டு போக்குகள் (CPA, ஆகஸ்ட் 2024), https://www.cpalanka.org/the-intersectional-trends-of-land-conflicts-in-srilanka/#:~:text=CPA%20recognises%20a%20series%20of>making%20objectives%20of%20private%20entities.

| | |
|---|---|
| காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP) மற்றும் பாரிய மனித புதைகுழிகள் | • OMP சுயாதீனமாக செயல்படக்கூடிய வகையில், போதுமான நிதியுதவி மற்றும் அரசியல் தலையீடுகளிலிருந்தான பாதுகாப்பு உள்ளிட்டவற்றை உறுதிப்படுத்துதல்.<br>• OMP இன் முழு ஆணையின் கீழ் இயங்கும் வகையில் அலுவலக வினைத்திறன் முன்னேற்றத்தில் சுதந்திரமாக செயல்படக்கூடிய ஆணையர்கள் நியமித்தல் மற்றும் பணியாளர்களை ஆட்செர்ப்பு செய்தல்.<br>• பிரதேசத்திற்கு பொறுப்பான சட்ட அதிகார வரம்பு கொண்ட நீதவானின் உதவியுடன் பாரிய மனித புதைகுழிகளின் அகழ்வாராய்ச்சி மற்றும் தோண்டுதல் ஆகியவற்றிற்கு பங்களித்தல், மனித எச்சங்களை அடையாளம் காணும் முதன்மையான பொறுப்பினை ஏற்றல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் ஒரு சிறப்பு தடயவியல் குழுவை உருவாக்குவதற்கு OMP க்கு தேவையான வளங்கள் இருப்பதை உறுதி செய்தல்.<br>• OMP, அரச பகுப்பாய்வாளர் மற்றும் ஏனையோர் உள்ளிட்ட அரசின் ஒட்டுமொத்த தடயவியல் விசாரணைகுழுவின் தகுதித்திறன் மற்றும் நிபுணத்துவத்தை வலுப்படுத்துதல். |
| உண்மை மற்றும் நல்லிணக்கம் | • பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதில் தோல்வியடைந்ததும், தேசிய நல்லிணக்கத்தை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட உண்மையான முயற்சியா என கேள்வி எழுப்பும் வகையில் அமைந்த, தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அவசியப்பாட்டினை மதிப்பாய்வு செய்தல்.<br>• பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய தெளிவான விடயப்பரப்புகளை வழங்கிய ஆலோசனை பணிக்குழுவின் அறிக்கை உள்ளிட்ட தற்போது எஞ்சியுள்ள எழுத்திலான படைப்புக்களை மதிப்பாய்வு செய்தல். |
| **சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல்** | |
| 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) ரீவுயு)<br>மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் | • பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் அதன் தற்போதைய வடிவில் இருந்து நீக்கப்படவேண்டியதுடன், தேவைப்படின், ஐக்கிய நாடுகள் சபை ஆவணங்களில் பிரதிபலிக்கின்ற சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு தரநிலைகளுடன் ஒத்திசையும் வகையில் மற்றும் எமது அரசியலமைப்பு நடைமுறையின் ஏற்புடைமையுடன் ஒத்துப்போகும் வகையில் மாற்றங்களை மேற்கொள்ளல்.<br>• தேவையான சட்ட சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினை பயன்படுத்துவதற்கு உடனடியான தற்காலிகச் செயல்நிறுத்தத்தினை மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் | • 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினை நீக்குவதோடு, பல பங்குதாரர்களிடமிருந்துமான பலதரப்பட்ட கண்ணோட்டங்களில் அமைந்த அனைவரும் உள்வாங்கப்பட்ட மற்றும் வெளிப்படைதன்மையுடைய சீர்திருத்த செயன்முறையினை அவசரமின்றி மேற்கொள்ளல்.[5] |
| அரசு சாரா நிறுவனங்கள் தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள விதிமுறைகள் தொடர்பான விடயங்கள் | • சட்டச் சீர்திருத்தங்களைத் மேற்கொள்ளும்போது வெளிப்படைத்தன்மையுடைய மற்றும் அனைவரும் உள்வாங்கப்பட்ட செயல்முறையை பின்பற்றுதல் மற்றும் அவை சர்வதேச தரங்களுக்கு இணங்குவதனை உறுதி செய்தல். |
| 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழச் சட்டம் | • குறித்த சட்டத்தின் 11வது பிரிவிற்கிணங்க ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அரச அதிகாரிகளுக்கு எதிராக அமுல்படுத்தக்கூடிய தீர்மானங்களை எடுக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளல். |
| 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை சட்டம் | • 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் பிரிவு 3 ஐ நீக்குதல். |
| தேர்தல் சட்டங்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் | • தற்போதுள்ள சட்டங்களில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல். எடுத்துக்காட்டாக, 2023 ஆம் ஆண்டின்3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குற்றங்கள் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு மாத்திரமே பொருந்தும் என்பதோடு அவை அரசியல் கட்சிகளுக்கு பொருந்தாத சூழ்நிலையில் குறித்த சட்டம் உயர்நீதிமன்றத்தின் வரையறைகளுடன் ஒத்திசைவற்ற தன்மையினை வெளிக்காட்டுகிறது. மேலும், தேர்தல் ஆணைக்குழுவிற்கு தவறான தகவல் தெரிவிக்கப்படும் சூழ்நிலையில் தனிநபர்களை பொறுப்பேற்க வைக்கும் தொழில்நுட்பதிறன் குறைபாடும் நிலவுகிறது. மேலும், நீதிமன்றங்களில் தேர்தல் மனுக்கள் தொடர்பாக தனிப்பட்ட வேட்பாளர்கள் மட்டுமே முன்னிலையாக அனுமதி இருப்பதால்<br>• பொது மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுக்கு நீதிமன்றங்களில் சட்டப்பூர்வமாக அறிக்கையிடல் அறிக்கைகளை சவால் செய்ய முடியாத நிலைப்பாடு காணப்படுகிறது.<br>• புலம்பெயர் தொழிலாளர்களின் வாக்களிக்கும் உரிமையை அங்கீகரிக்கும் வகையில், புலம்பெயர் தொழிலாளர்கள் தாங்கள் வசிக்கும் நாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களில் பதிவுகளை செய்வதற்கான ஒரு கட்டமைப்பு மற்றும் தேர்தல் நேரங்களில் அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கும் பொறிமுறை ஆகியவற்றை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல். |

[5] "2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பான அறிக்கை" (CPA, பெப்ரவரி 2024). ரவவிள:.˙..˙.றறற.cpaடயமெய.முசப.˙.ளவயவநஅநவெ-மழ-வாந-மடைநை-ளயகநவல-யஉ-வ-ெழ-09-முக-2024.˙.

| | |
|---|---|
| | • அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி, பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களை நிர்வகிக்கும் சட்டங்களை திருத்துதல். |
| 1951 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் (திருத்தப்பட்டது) சட்டத்தினை (திருத்தப்பட்டது) சீர்திருத்தம் செய்தல் | • முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் (MMDA) சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமையளித்து, பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை உறுதிசெய்தல். |
| பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV) nதாடர்பான தற்போதைய சட்டங்களில் சீர்திருத்தம் மேற்கொள்ளல் | பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV)[6] தொடர்பான தற்போதைய தண்டனைச் சட்டங்களை ஆராய்ந்து அவற்றை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம்.6 இவற்றில் அடங்குவன:<br>• பாலியல் வன்புணர்வு குற்றத்தை தண்டனைச் சட்டக்கோவையில் சீர்திருத்தம் மேற்கொள்வதனூடாக பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய பாதுகாப்பினை வழங்குதல்.<br>• கருக்கலைப்பினை குற்றமற்றதாக்குதல்.<br>• சர்வதேச தரங்களுக்கு இணங்க அந்தரங்கத்துகான உரிமை மற்றும் தனியாள் சுதந்திம் மதிக்கப்படுவதை உறுதிசெய்தல், குறிப்பாக வயதுவந்தவர்களுக்கிடையேயான தனிப்பட்ட ஒப்புதலுடன்கூடிய பாலியல் செயற்பாடுகளை குற்றமற்றதாக்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் பிரிவு 365A ஆகியன நீக்குதல்.<br>• பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>• நிகழ்நிலை வடிவில் இடம்பெறும் SGBV வன்முறைகளுக்கு எதிராக தகுந்த விசாரணை செய்யவும், வழக்குத் தொடரவும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• SGBV வன்முறைகளுக்கு எதிரான விரைவானதும் மற்றும் தனிப்பட்ட வகையில் வழக்குத் தொடர்வதனை அனுமதிக்கும் நடபடிமுறைச் சட்டங்களைப் புதுப்பிப்பதனூடாக, பாதிக்கப்பட்டவர்களின் மனஅதிர்ச்சி மற்றும் மீளவும் பாதிப்பினை எதிர்கொள்ளும் நிலை ஆகியவற்றைக் குறைத்தல்.<br>• 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றங்கள் மற்றும் சாட்சிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கல் சட்டத்தினை சீர்திருத்தம் செய்து அமுல்படுத்துதல். |

[6] "பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்ப்பதற்க அவசியமான சட்ட சீர்திருத்தம்" (CPA, நவம்பர் 2020).

https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/Law-Reform-to combat-SGBV-PART-1-General-Centre-for-Policy-Alternatives.pdf

| | |
|---|---|
| | • SGBV வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை முறையாகக் கையாள்வதற்கு சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.<br>• ளுபு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எளிதாக அணுகக்கூடிய முறைப்பாட்டு வழிமுறைகளை உருவாக்குதல்.<br>• இலங்கையில் அதிகரித்துவரும் SGBV வன்முறைகளுக்கான வேரூன்றிய காரணங்களை ஆராய்தல் மற்றும் இவ்வாறான வன்முறை சம்பவங்களைத் தடுப்பதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.<br>• பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் தனிநபர்களைத் துன்புறுத்துவதற்கும் காவலில் தடுத்து வைப்பதற்கு வழிவகுக்கும் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தினை சீர்திருத்தம் செய்தல். |